**OS.NO:06/2022**
**DW 2 :** திரு**.** ஜானகிராமன்**.**
நாள் : 30.09.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பால் வியாபாரம் செய்கிறேன். பால் வியாபாரத்தில் வருகின்ற வருமானத்தை வைத்து நான் குடும்பம் நடத்துகிறேன் என்றால், பால் வியாபாரம், விவசாயம், மாட்டு பண்ணை மூலம் எனக்கு வருமானம் வருகிறது. 16.11.2021 அன்று நான் 1ம் பிரதிவாதியுடன் கிரைய உடன்படிக்கை எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். 15.12.2021 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். ரூ.13,50,000/– டிடி எடுத்த அன்று 1ம் பிரதிவாதியுடன் உடன்படிக்கை எதுவும் போடவில்லை என்றால், சரிதான். வாதி அஞ்சனாவை எனக்கு நேரிடையாக தெரியாது. வா.சா.ஆ.1ல் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக நானும், அஞ்சானவும் சேர்ந்துதான் வா.சா.ஆ.1 உடன்படிக்கை ஏற்படுத்தினோம் என்றால், அது தவறு. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்ற விவரம் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. நானும், வாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில் –**

குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.

Sd/– Selvam, M.L.,
I Additional District Judge,
Ranipet.